மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைமைச் செயலக அலுவலகத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் முழுவதையும் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: வாடகைக்காக ரூபாய் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கட்டிடம் பூராவையும் சொந்தமாகக் கட்ட 'செவரல் குரோர்ஸ்', ரூ. 600, ரூ. 800 கோடி ஆகும் என்று சொல்கிறார்கள். அதற்கு வட்டியை மட்டும் கணக்குப் பார்த்தால் எத்தனையோ லட்சம் சேரும். அதைவிட இப்பொழுது துள்ளதைப்போல இருந்துகொண்டு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள், ஆலோசனை கூறுகிறீர்கள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: ரூ. 600 கோடி, ரூ. 700 கோடியை வீடுகள் கட்டி ஏழைகளுக்கு வசதிகள் பண்ணினால் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் நினைக்கிறாரா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேட்க வேண்டும். யோசனை சொல்லக் கூடாது. வினா எண் 165. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கட்டிடங்கள் கட்ட ரூ. 600 கோடி, ரூ. 700 கோடி ஆகுமென்று சொன்னார்கள். மொத்த வாடகை லட்சத்திற்கு மேல் ஆகிறது என்று விவரம் கொடுத்தேன். இப்படிக் கட்டிடங்கள் கட்டுவதன்மூலம் வாடகை கொடுப்பது மிச்சமாகும். மேலும் வருவாயைத் தேட முடியும் என்ற நிலையில் 'ஷாப்பிங் சென்டர்ஸ்' வைக்க முடியுமா என்பதையும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்து வருகின்ற இந்த அரசு எடுத்த முயற்சியை அங்கத்தினர் பாராட்டினால் பெருந்தன்மையோடு பாராட்டினார் என்று கருதி இருப்பேன். அவர் அப்படிப் பாராட்டாதது, இந்த அரசு ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தது அங்கத்தினருடைய கவனத்தில், நினைவில் இல்லாமல் போய்விட்டது என்றுதான் நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-30]

* 165 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the construction of tiffin rooms, latrines and cycle-stand at the Government office building at Chepauk has been taken up by the Public Works Department ; and

(*b*) if so, the details thereof ?

1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழக அரசு ரூ. 2.50 லட்சம் மதிப்பில் சேப்பாக்கத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகங்களில் சிற்றுண்டி அறைகள், கழிப்பிடங்கள் மற்றும் மிதி வண்டிகள் வைப்பதற்கான கொட்டகைகள் கட்டுவதற்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. 1974 ஏப்ரல் மாதத்தில் வேலை துவங்கப்படவிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, செகரட்டரியேட்டிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள்கூட டிபன் சாப்பிடுவதற்கு இடம் இல்லாமல் ஆங்காங்கே உள்ள ரோடு ஓரங்களிலே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் டிபன் சாப்பிடுவதற்குத் தனியான இடம் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, போர்டு ஆபீஸ் பற்றித்தான் கேள்வி. அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

Sharing of water from Neyyaru.

* 166 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the agreement reached between the Governments of Tamil Nadu and Kerala in regard to the sharing of Neyyar Waters?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நெய்யாறு பாசனத் திட்ட அமைப்பிலிருந்து தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்துவதற்காகக் கேரள அரசு அனுப்பியுள்ள உத்தேச விதிகளின்கீழ் கேரள அரசு தமிழ் நாட்டுக்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் வழங்கும். எனினும், தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்துவதற்கு விதிகள் இயற்றினால் மட்டும் போதாது என்றும் இரு மாநிலங்களுக்கு இடையே முறையான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த அரசு கருதியுள்ளது. ஒப்பந்த வரைவு ஒன்றும் கேரள அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU N. DENNIS: **May I know, Sir, whether our State is getting full quantity of water as per the original terms of agreement with the Kerala Government? If not, the reasons for the same may be indicated.**